

லண்டன் நகரில் நடைபெறவுள்ள அயலக தமிழர் சாதனை விருது 2025 வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்றுள்ள சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெரும் முயற்சியால், தமிழ்நாடு அரசு சார்பில, இங்கிலாந்து நாட்டின் கேம்பர்ளி நகர மையப் பூங்காவில் நிறுவப்பட்ட கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் சிலைக்கு நேரில் சென்று மரியாதை செலுத்தினார். உடன் கேம்பர்ளி நகர மேயர் லூவிஸ் பேர்ரி, துணை மேயர் கில்பர்ட் பட்டன், இங்கிலாந்து தி.மு.க. அயலக அணி அமைப்பாளர் செந்தில், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் ஜெரால்டு, கேம்பர்ளி நகர தமிழ் சங்க செயலாளர் சந்தானம் ஆகியோர் உள்ளனர்.

### லண்டனில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முயற்சியால் நிறுவப்பட்ட

# பென்னிகுக் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## அமைச்சர் சா.மு.நாசர் செலுத்தினார்!

லண்டன், மே 24-

இங்கிலாந்து நாட்டின் கேம்பர்ளி நகர மையப் பூங்காவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெரும் முயற்சியால் நிறுவப்பட்ட கர்னல் ஜான் பென்னிகுயிக்கின் சிலைக்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் நேரில் சென்று மரியாதை செலுத்தினர்

அப்போது அமைச்சர் சா.மு.நாசர் கூறியதாவது:-

இந்திய அரசியல் களத்தில் தனித்துவமான மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. 'வந்தாரை வாழவைக்கும் தமிழகம்' என்பது வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல.

தங்களை வாழவைத்தவர்களையும் தமிழர்கள் தெய்வத்துக்கு நிகராகவே வழிபடுவர். அதற்குச் சரியான சான்று பென்னிகுவிக்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பொறியாளராக இருந்த பென்னிகுவிக், தென் தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தளவில் ஒரு காவல் தெய்வம். ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 14 ஆம் தேதியன்று, அவரது பிறந்த நாளை மதுரை, தேனி உள்ளிட்ட 5 மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் பொங்கல் வைத்துக் கொண்டாடுகின்றனர்.

முளைப்பாரி சுமந்து அவருக்கு நடத்தப்படும் நேர்த்திக்கடன் காலம் காலமாக தமிழ் மண்ணில் கடைபிடிக்கப்பட்டு வரும் சடங்குகளில் ஒன்று. அந்த ஊர்களில் சுபகாரிய ங்களுக்கு அச்சடிக்கப்படும் அழைப்பிதழ்களில், கடவுள் படங்களுக்குப் பதில் பென்னிகுவிக் படம் இடம்பெறும்.

தேனி உள்ளிட்ட தென் மாவட்ட கிராமங்களில் இன்றும் கூட தங்களது வீட்டில் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு முதல் பெயராக பென்னிகுயிக் என்று பெயர் சூட்டுவது பாரம்பரியமாக தொடர்கிறது.

தமிழக முதலமைச்சராக முத்தமிழறிஞர் கலைஞர் பதவி வகித்த 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் தேதி மதுரை தல்லாகுளத்தில் உள்ள பொதுப்பணித்துறை வளாகத்துக்குள் பென்னிகுவிக்குக்கு சிலை ஒன்றை நிறுவினார். இதன் நீட்சியாக, இந்திய அரசியலில் நிகழாத ஓர் அதிசயத்தை அரங்கேற்றிக் காட்டியுள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். பென்னி குவிக்கு, அவர் பிறந்த லண்டனிலுள்ள கேம்பர்ளி பூங்காவில் அவரது சிலையை தமிழ்நாடு அரசு சார்பாக கடந்த 2022 அக்டோபர் மாதம் சிலை நிறுவவைத்தவர் நம் முதல்வர் அவர்கள்.

இந்த சிலையை திறப்பதற்காக அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமையில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் லண்டன் சென்று நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

முல்லைப் பெரியாறு அணையின் சிறப்பை நாம் புரிந்துகொள்ள வேண்டும். 1896, 1897 ஆம் ஆண்டுகளில் தேனி உட்பட 5 மாவட்டங்கள் இந்த அணையால் சுமார் 50106 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றது. தற்போது முல்லைப் பெரியாறு அணை, தென் தமிழகத்தின் பாசனத்துக்கு முக்கிய நீர்ப்பாசன ஆதாரமாக விளங்குகிறது.

முல்லைப் பெரியாறு அணை மூலம், மதுரையைச் சுற்றியுள்ள கம்பம், தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள 2.13 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன.

அணை மூலம், பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் 80 லட்சம் மக்கள் வரை தினசரி குடிநீர் பயன் பெறுகின்றனர்.

அணை, பல ஆயிரம் சதுர கி.மீட்டரில் நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாக்கிறது.

வழக்கமாக ஓடிக்கொண்டிருக்கும் நதியை குறுக்கே தடுத்து அணையைக்கட்டுவது எளிது. ஒரு நதி ஓடிக்கொண்டிருக்கும் திசைக்கு எதிராக அதை திருப்பி வேறு பக்கத்தில் அணையை எழுப்புவது என்பது சாத்தியம் இல்லாதது. பென்னிகுவிக் அந்தச் சாதனையைத்தான் செய்துள்ளார்.

இந்த அணையைக் கட்டிக் கொண்டிருக்கும் போது கடும் வெள்ளம் ஏற்பட்டதால் பணிகளைத் தொடர்ந்து செய்ய முடியவில்லை. பிரிட்டிஷ் அரசு சோர்வுற்று நிதி ஒதுக்குவதை நிறுத்தியது. ஆனால் தனது கனவு எந்தக் காரணத்தாலும் தடைப்பட்டு நின்றுவிடக் கூடாது என நினைத்த குவிக், தனது லண்டனுக்குப் புறப்பட்டார். அங்கே தனக்கு இருந்த நகைகள், மற்றும் சொத்துகளை விற்று அந்தப் பணத்தைக் கொண்டு வந்து தடைப்பட்ட அணையின் பணிகளை மீண்டும் தொடர்ந்தார், கிட்டத்தட்ட அன்றைக்கு இந்திய மதிப்பில் 85 லட்சம் ரூபாய் கொடுத்தவர் பென்னி குவிக், இன்றைக்கு சுமாரக ஒரு அணை கட்ட ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும், என தெரிவித்தார்.

அதுபோது கேம்பர்ளி நகர மேயர் மேயர் லுவிஸ் பேர்ரி, துணை மேயர் கில்பர்ட் பட்டன், U.K. தி.மு.க. செயலாளர் செந்தில், சிப்பர்லி தமிழ் சங்கம் செயலாளர் சந்தானம், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு உடனிருந்தனர்.

### குன்னூரில்

# தற்காலிகமாகச் செயல்பட உள்ள அரசு கலைக் கல்லூரி!

## தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் ஆய்வு!

உதகை, மே 24-

குன்னூரில் தற்காலிகமாக செயல்படவுள்ள அரசு கலைக்கல்லூரியை தமிழக அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டத்தில் உயர்கல்விக்காக ஊட்டி, கூடலூர் பகுதிகளில் அரசு கல்லூரிகள் உள்ளன. அங்கு 8 ஆயிரம் மாணவர்கள் படிக்கின்றனர். இதனிடையே குன்னூர், கோத்தகிரி மாணவர்களின் நலன் கருதி குன்னூரில் அரசு கல்லூரி விரைவில் தொடங்கப்படுவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைமுறையில் இருந்து வந்தது. குறிப்பாக கடந்த 2022 ம் ஆண்டு ஊட்டி பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் அரசு தலைமைக் கொறடாவுமான ராமச்சந்திரன், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பிளஸ்2 பயின்ற மாணவாகளுக்கான உயர் கல்விக்கு வழிகாட்டும் 'கல்லூரிக்கனவு' நிகழ்ச்சியில் இது குறித்து பேசினார். மலை மாவட்டமான நீலகிரியில் உதகை மற்றும் கூடலூர் பகுதிகளில் அரசு கல்லூரிகள் செயல்பட்டு வரும் நிலையில் குன்னூர் பகுதியில் இதுவரை கலை அறிவியல் கல்லூரி இல்லாமல் இருந்தது. இதனால் குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மாணவ, மாணவிகள் பெரும் சிரமம் அடைந்து வந்தனர். மேலும் கல்லூரிகளில் மேற்படிப்பை தொடர உதகை, கோவை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு செல்ல வேண்டிய நிலை இருந்துவந்தது.

இந்நிலையில் மார்ச் மாதம் 14ம் தேதி பட்ஜெட்டில் குன்னூர் பகுதியில் கலை கல்லூரி கொண்டு வரப்படும் என்ற அறிவிப்பை தமிழ்நாடு அரசு அறிவித்தது.

இந்த திட்டம் மாணவ, மாணவிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. மேலும் குன்னூரில் பல்வேறு கிராமப்பகுதிகளில் இருந்து பல மாணவ, மாணவிகள் உதகை மற்றும் கோவையில் உள்ள அரசு கல்லூரிகளுக்கு செல்வதால், காலை 6.30 மணிக்கு சென்றால்தான் அரசு பேருந்து மூலமாக 9.30 மணிக்கு கல்லூரிக்கு சென்றடையும் சூழல் இருந்து வந்தது. மேலும் = மழை காலங்களில் கல்லூரிக்கு செல்வதற்கு பெரும் சிரமம் ஏற்பட்டு வந்த நிலையில் கிராமப்புற பகுதிகளில் இருந்து பேருந்துகள் தாமதமாக வரும் போது மாணவ, மாணவிகள் கல்லூரிக்கு செல்ல இயலாத சூழல் ஏற்பட்டு வந்தது. இனி வரும் காலங் களில் மாணவ, மாணவியர்களுக்கு ஏதுவாக தமிழக அரசு முயற்சி மேற்கொண்ட இத்திட்டத்தை பலரும் மனதார வாழ்த்தி வந்த நிலையில், அதற்கேற்றவாறு இரண்டு மாதத்திற்குள் கல்லூரியில் மாணவ, மாணவிகளின் சேர்க்கையும் துவங்கியுள்ளது.

குறிப்பாக குன்னூரில் செயல்பட்டு வரும் அறிஞர் அண்ணாமேல்நிலைப்பள்ளியில் மாணவர் சேர்க்கை குறைந்து வந்த நிலையில், புதிதாக கல்லூரி கட்டும் வரை அறிஞர் அண்ணா பள்ளியை அரசு கலைக்கல்லூரியாக மாற்றம் செய்யப்பட்டு, நடப்பாண்டிற்கான கியுள்ளது. மாணவர் சேர்க்கை துவங் இதனை முன்னிட்டு, நேற்று அரசு தலைமைக் கொறடாராமச்சந்திரன் கல்லூரியின் வளாகம், வகுப்பறைகள், விளையாட்டு மைதானம் ஆகியவற்றை நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார், மாவட்ட முன்னாள் சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் சி.டி.என். பாரூக் உட் பட தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை நா. சம்பந்தன்
### மே 24 (1998)



சென்னை மாவட்டம், மயிலைப் பகுதிக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் – மண்டலக்குழுத் தலைவர் மற்றும் மயிலை இந்து சாசுவத நிதி நிறுவனத்தில் இயக்குநராக மூன்று முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மிசா சட்டத்தின்கீழ் சிறைவாசம் – இந்தி எதிர்ப்பு – இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

## அச்சிறுப்பாக்கம் வடக்கு, அச்சிறுப்பாக்கம் தெற்கு, அச்சிறுப்பாக்கம் மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள அச்சிறுப்பாக்கம் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியங்கள் இணைத்து மறு சீரமைக்கப்பட்டு, மூன்று ஒன்றியங்களாக பிரிக்கப்பட்டு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கபட்ட **அச்சிறுப்பாக்கம் வடக்கு, அச்சிறுப்பாக்கம் தெற்கு, அச்சிறுப்பாக்கம் மத்திய** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் :** 1. கரிக்கலி, 2. வெள்ளபுத்தூர், 3. பாப்பநல்லூர், 4. கோழியாளம், 5. வேடந்தாங்கல், 6. தண்டரைபுதுச்சேரி, 7. பெரும்பாக்கம், 8. ஒரத்தூர், 9. கடம்பூர், 10, ஆலப்பாக்கம், 11. தீட்டாளாம், 12, எல். எண்டத்தூர், 13. செம்பூண்டி, 14. கீழாமூர், 15. கிளியாநகர், 16. மொரப்பாக்கம், 17. கூடலூர், 18. ஊனமலை, 19. அகிலி, 20. மாத்தூர், 21. சிறுநாகலூர் ஆகிய 21 ஊராட்சிகள்

**அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் :** 1. அன்னங்கால், 2. ஒரத்தி, 3. பொறகால், 4. மின்னல் சித்தாமூர், 5. தொழுப்பேடு, 6. கடமலைபுத்தூர், 7. கீழ்அத்திவாக்கம், 8, நெடுங்கல், 9. களத்தூர், 10. முருங்கை, 11. விண்ணம்பூண்டி, 12. தின்னலூர், 13. வடமனிப்பாக்கம், 14. அனந்தமங்கலம், 15. கொங்கரைமாம்பட்டு, 16. சிறுதாமூர், 17. எடையாளம், 18. ஆத்தூர், 19. வெளியம்பாக்கம், 20. கரசங்கால், 21. பள்ளிப்பேட்டை, 22. அத்திவாக்கம், 23. காட்டுக்கூடலூர் ஆகிய 23 ஊராட்சிகளும் மற்றும் அச்சிறுப்பாக்கம் பேரூர்.

**அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் :** 1. விளாங்காடு, 2.திம்மாபுரம், 3. திருமுக்காடு, 4. காட்டுக்கரணை, 5. மதூர், 6. ஆணைக்குண்ணம், 7. எலப்பாக்கம், 8. பொற்பணங்கரணை, 9. பாபுராயன்பேட்டை, 10. சிறுபேர்பாண்டி, 11. சீதாபுரம், 12. பெரும்பேர்கண்டிகை, 13. பாதிரி, 14. வேலாமூர், 15. மோகல்வாடி ஆகிய 15 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **அச்சிறுப்பாக்கம் வடக்கு, அச்சிறுப்பாக்கம் தெற்கு, அச்சிறுப்பாக்கம் மத்திய** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **ஜி. தம்பு (எ) குப்புசாமி,** காஞ்சிபுரம் மாவட்டம்,

**அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **கே. கண்ணன்,** காஞ்சிபுரம் மாவட்டம்

**அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம்**

பொறுப்பாளர் : **டி.வி. கோகுலகண்ணன்,** காஞ்சிபுரம் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தஞ்சை தெற்கு மாவட்டம்

## பட்டுக்கோட்டை தெற்கு, பட்டுக்கோட்டை வடக்கு, பட்டுக்கோட்டை கிழக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மாற்றியமைப்பு!

### தலைமைக் கழகம் அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி, ஏற்கனவே மறு சீரமைப்பு செய்து அறிவிக்கப்பட்ட பட்டுக்கோட்டை தெற்கு ஒன்றியத்தில் உள்ள **நரசிங்கபுரம்**, மற்றும் பட்டுக்கோட்டை வடக்கு ஒன்றியத்தில் உள்ள **பழஞ்சூர்** ஆகிய இரண்டு ஊராட்சிகள் பட்டுக்கோட்டை கிழக்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது.

மேலும் பட்டுக்கோட்டை கிழக்கு ஒன்றியத்தில் உள்ள **சுந்தரநாயகிபுரம்** ஊராட்சி பட்டுக்கோட்டை வடக்கு ஒன்றியத்தில் இணைக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### விருதுநகர் தெற்கு மாவட்டம்

## சாத்தூர் கிழக்கு, சாத்தூர் மேற்கு, வெம்பக்கோட்டை கிழக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மாற்றியமைப்பு!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த "தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு" ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

சாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாத்தூர் கிழக்கு ஒன்றியத்தில் உள்ள **அம்மாபட்டி, சின்னக்கொல்லபட்டி, பெரிய கொல்லப்பட்டி, கத்தாளம்பட்டி, அ.இராமலிங்காபுரம், சடையம்பட்டி** ஆகிய 6 ஊராட்சிகள் சாத்தூர் மேற்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது. சாத்தூர் கிழக்கு ஒன்றியம் மீதமுள்ள 28 ஊராட்சிகளைக் கொண்டு தொடர்ந்து செயல்படும்.

அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெம்பக்கோட்டை கிழக்கு ஒன்றியத்தில் உள்ள **முத்தாண்டியாபுரம்** ஊராட்சி சாத்தூர் கிழக்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.